# தேம்பாவணி புலப்படுத்தும் அறம்

*முனைவர் க. ஹெப்சிபா ஜூலி ஜெயசீலி*
உதவிப்பேராசிரியர் பொருளியல்துறை
போப்கல்லூரி சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6492

***முன்னுரை***

*தமிழரின் முகமாகவும் முகவரியாகவும் மிளிர்வது வையகமே வியந்து போற்றும் திருக்குறள் தான் என்பார் கவிவேந்தர் கா. வேழவேந்தன். இத்தாலியத் தமிழ் ஏந்தல் வீரமாமுனிவர் திருவள்ளுவரின் முப்பாலாம் திருக்குறளை 1730 ஆம் ஆண்டு தமது ஐம்பதாவது அகவையில் இலத்தீன் மொழியில் வழங்கி உலகுக்கு அறிமுகம் செய்தார். வீரமாமுனிவரின் விழுமிய காப்பியமான தேம்பாவணியிலும் பிற நூல்களிலும் திருக்குறள் மணிகளைப் பயன்படுத்தித் திருவள்ளுவரின் பெருமையினை உலகம் போற்றிப் புகழ வழிகாட்டியுள்ளார். இறைமகன் இயேசுவை வளர்த்த தந்தையான யோசேப்பு என்னும் வளனாரின் அறுபதாண்டு வாழ்வியல் காப்பியமான தேம்பாவணியில் அறநெறிக் கருத்துக்களை நிறைவாக நல்கியுள்ளார். முப்பத்தாறு படலங்களும் மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாக்களும் கொண்டுள்ள தேம்பாவணி நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் திருக்குறள் பாக்களையும் தொடர்களையும் பாங்குறப் பயன்படுத்திய சிறப்பு குறிப்பிடத்தக்கது.*

**காப்பியத் தலைவன் வளன் வாழ்வு**

தேம்பாவணிக் காப்பியத் தலைவன் வளன் பேய்களை வென்ற பெருந்தவத்தின் ஆண்மை கொண்ட வீரனாகப் போற்றப்படுகிறான். கூளியை வென்ற மாதவத்து ஆண்மையின் வீரர் என்பது வீரமாமுனிவர் விளம்பும் செய்தி இல்லற வாழ்வில் துறவறத்தை மேற்கொண்ட வளனும் மரியாளும் வாழ்ந்த பாங்கினைத் தேம்பாவணி விரித்துரைக்கிறது.

மானத்தைத் தமக்கு வேலியாகவும், ஞானத்தைத் தூதனாகவும், தானத்தைத் தோழனாகவும், மண்ணுலகில் உடலோடு இருந்தாலும் அறிவு உணர்வினால் வானத்தையே தமக்கு உறைவிடமாகவும் கொண்டு எந்தக் குறையும் இல்லாது இனிமையாக வளனும் மரியாளும் வாழ்ந்தனர் என்பர் வீரமாமுனிவர்.

**மானமே வேலியாய் வகுத்த சொல்தரும்**
**ஞானமே தூதனாய் நயப்ப யாவரும்**
**தானமே தோழனாய் அறிவின் தன்மையால்**
**வானமே உறையுளாய் மடி(வு) இல் வாழுவார்.**

நாசரேத்தூர்த் தச்சுத் தொழிலாளியான வளன், முழுதும் உணர்ந்த அருள் முற்றிய மாமுனியாக விளங்குகிறார். உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ளவன் ஆகி, உலகின் அருள் அரசாகத் திகழ்கிறார்.

வளனை நாடி நிற்போர் துயர் அனைத்தும் தீரும் என்று வீரமாமுனிவர் விளம்புகிறார்.

**தாயே ஒக்க அருந்தயை ஒக்கம் அறா**
**நோயே ஒக்க மருந்தினை ஒக்கும் நுழை**
**பேயே ஒக்க அரண்பிணைவு ஒக்கும் உயிர்**
**மீயே ஒக்க விடாத்துறை ஒக்கும் இவன்**

காப்பியத் தலைவன் வளன் பேரன்புத் தாயாகவும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் பேய்க்கு அசையாத கோட்டையாகவும் வான்வீட்டுக்கு வழித்துணையாகவும் விளங்கினான் என்பது குறிப்பிடத்தக்க சிறப்புமிக்கது.

எசித்து நாட்டில் காப்பியத் தலைவன் வளன் அன்பால் மக்கள் அனைவரையும் கவர்ந்து அறத்தின் பயனைப் புலப்படுத்தும் பெரு விளக்காக ஒளியுடன் மிளிர்ந்தான் என்பர்.

**தனிஅ வாஇருள் உளம்புகாத் தெளிநலம் நயப்ப**
**இனிய கூறலும் எமர்பிறர் இன்றிஓம் பலும் உள்**
**முனிய மாறலும் முரிந்தனர் நிறுத்தலும் மற்றக்**
**குனிய சீலமும் காட்டி ஓர்பெரு விளக்(கு) ஆனான்.**

## மரியாளின் பண்பு

எருசலேமில் கவக்கீன் - அன்னம்மாள் ஆகியோரின் மகளாகத் தோன்றும் மரியாள் பதினான்கு அகவையில் வளனாரின் வாழ்க்கைத்துணை ஆகிறாள். நாசரேத்தூரில் தச்சுத் தொழிலாளி வளன் வாழ்க்கைத் துணையாக அமைகிறாள். தன் கணவன் வளனுடன் பெத்திலேம் செல்லும்போது காமுகி காந்தரியை நன்னிலைப்படுத்துகிறாள்.

**கண்ணீர் ஆடிக் கழுவும்**
**கசடற்(று) உணர்ந்த ஞானத்**
**தெண்ணீர் ஆடித் தெளிந்தாள்**
**தெளிஉள் நிறைதே அருளின்**
**தண்ணீர் ஆடிக் குளிர்ந்தாள்**
**தவறா அறமா புணரிக்**
**கண்ணீர் ஆடி உயர்ந்தாள்**
**உருவே(று) இயல்வே(று) ஆனால்**

கணவன் வளனுடன் இருபத்தேழு ஆண்டுகள் வாழும் மரியாள் அவன் மறைவுக்குப் பின்னரும் திருமகன் இயேசுவைப் பேணிக் காக்கிறாள். எழுபது அகவை வரை வாழ்கிறாள். மாட்சிமிகு மனைவியாகவும் இறைவனின் அன்னையாகவும் இலட்சிய நங்கையாகவும் திகழ்கிறாள். சூரியனை ஆடையாகவும், சந்திரனை மிதியடியாகவும் விண்மீன்களை மணிமுடியாகவும் பெற்று மரியாள் ஒளியுடன் மிளிர்வதைக் கனவுக் காட்சியாகக் கண்ட கணவன் வளன், அகமிக மகிழ்ந்து மரியாளைப் பலவாறு புகழ்வது கருதத்தக்கது.

**தூய்உலாம் இந்துஉலாம் சொக்குஉலாம் பாதமும்**
**சேய்உலாம் பான்உலாம் சீர்உலாம் தேகமும்**
**மீஉலாம் மீன்உலாம் மின்உலாம் சென்னியும்**
**ஒய்விலாது இற்றுஉலாம் உற்றுமா மாட்சியாய்**

## பத்துக் கட்டளைகள்

இறைவன் சீனாயிமாமலையில் மோயிசனுக்குக் காட்சி தந்தார். அவர் வாயிலாகப் பத்துக் கட்டளைகளையும் இரு கல்லில் பொறித்து வழங்கியுள்ளார். நல்வினை, தீவினை அறியும் ஆற்றலுடன் மனிதரை இறைவன் படைத்திருந்தார். ஞானம் என்னும் எழுத்தினால் மாந்தர் மனத்தில் எழுதி வைத்த வேதம், அவர்கள் செய்த பாவங்களால் மறைந்தது. மீண்டும் அவ்வேதத்தையே கல்லில் பொறித்துக் கொடுப்பதாகவும் இறைவன் அப்போது அறிவித்தார். முதல் கல்லில் மூன்று கட்டளைகளும் இரண்டாம் கல்லில் ஏழு கட்டளைகளும் குறிக்கப்பட்டிருந்தன. அவற்றைத் தேம்பாவணி இரு பாடல்களில் விளம்புகிறது.

இவ்வாறு மக்கள் தொடர்பான கட்டளைகள் ஏழும் இரண்டாம் கல்லில் இடம் பெற்றுள்ளன. இறையன்பு,பிறரன்பு என இவற்றை இயேசு பெருமான் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். பத்துக் கட்டளைகளும் அமைந்த பாங்கு குறிப்பிடத்தக்கது.

1. இறைவன் ஒருவரைத் தவிர வேறு கடவுள் இல்லை.
2. பொய்மைக்கு இறைவனைச் சான்று வைக்கக் கூடாது.
3. இறைவனின் திருநாட்களை முறையாகக் கொண்டாட வேண்டும்.
4. தந்தை தாயரைப் பேணிப் போற்ற வேண்டும்.
5. உயிர்க்கொலை எதுவும் செய்யக்கூடாது
6. தவிர்க்கவேண்டிய காமத்தை மேற்கொள்ளல் ஆகாது.
7. பொய் பேசக்கூடாது.
8. பிறர் பொருளைக் களவு செய்யக் கூடாது.
9. பிறர் மனைவி மீது சிந்தை செலுத்தல் ஆகாது.
10. பிறர் கைப்பொருளைக் கவர்ந்து கொள்ளக் கூடாது.

### ஈதல் இசைபட வாழ்தல்

தேம்பாவணிக் காப்பியத்தின் முதல் படலமாக மிளிர்வது யுதேயா நாட்டுப் படலம். யுதேயா நாட்டு மக்கள் வாழ்வியல் வளத்தை வீரமாமுனிவர் விண்டுரைக்கிறார். திருக்குறள் தொடரால் நம் பாடலுக்கு மகுடம் சூட்டியுள்ளார்.

**ஈத லோடுஇசை இனிய வாழ்வுகள்**
**ஆத லோடு அறன்அறிவில் ஆக்கினார்**
**காத லோடுஉடல் கூடிய நாள்வர**
**வீத லோடுஉறும் வீட்டில் வாழ்வரே.**

யுதேயா நாட்டினர் இரவலர்க்கு ஈந்து அதனால் வரும் புகழையும் இனிய வாழ்வால் நேரும் புண்ணியத்தையும் நிலையாக ஈட்டிக் கொண்டனர். ஆகவே உடலைவிட்டு உயிர்பிரியும் காலத்தில் மாண்டு போவர். தொடர்ந்து வானகத்தில் நல்வாழ்வு பெறுவர் என்கிறார் வீரமாமுனிவர்.

### அன்பின் வழியது உயிர்நிலை

திருவள்ளுவர் அருளிய திருக்குறள் கருத்தினை உணர்ந்தவன் போன்று. அன்பு தாங்கும் இன்ப நிலையமாக, உலகில் துன்பத்தால் வாடிய உயிர்களுக்கு எல்லாம் உறுதுணையாக வாழ்ந்தான் காப்பியத் தலைவன் வளன் என்கிறார் வீரமாமுனிவர்.

**அன்பு வாய்ந்த உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்பு தோல்உடல் போர்த்ததென்று அன்புறை**
**இன்பு தோய்ந்த நிலையெனத் தான் இவண்**
**துன்பு காய்ந்த உயிர்த்துணை ஆயினான்.**

அன்பு நிறைந்த உள்ளத்துடன் இலங்குவதே உயிருடன் கூடிய உடல் என்பர்.

### பொறுமை மிக்கவர் பெருமை பெறுவர்

மாடடைக்குடிலில் மார்கழிப் பனியில் குழந்தை இயேசு பிறந்தபோது பொறுமை மிகுந்த வளன் இறைமகனைப் பாடிப் பரவுவது குறிப்பிடத்தக்கது: தெளிவிக்க வேண்டும் என்னும் தயவுக்காகச் சினந்து கொள்பவனும் நீ தெளிந்தபின் முந்திய சினத்தின் அளவாக அருள் செய்பவனும் நீ பிறர் சொல்லித்தரும் கல்வி இல்லாமலே எல்லாம் உணர்பவனும் நீ நாவால் ஓசையில்லாமல் பேசுபவனும் நீ மாறும் பொருட்களில் நிலைபெற்றிருந்தாலும் மாறாநிலைகொள்ளும் இயல்புஉடையவன் நீ. முடிவற்ற உன் புகழ்க்கடலுக்குள் மூழ்கியுள்ள எனக்கு அதன் கரையைக் காட்டும் அருளுடையவனும் நீயே என்று பலவாறு பாடிப் போற்றுகிறார்.

**தேறும் தயையின் முனிவோய் நீ**
**சினத்திற்கு அருள்செய் கனிவோய்நீ**
**கூறும் கலைஅற்று உணர்வோய் நீ**
**கூறும் தொனிஅற்று உரைப்போய்நீ**
**மாறும் பொருள்யா விலும்நின்றே**
**மாறா நிலைகொள் மரபோய் நீ**
**ஈறும் தவிர்ந்தஉன் புகழ்க்கடல்ஆழ்ந்த**
**எனக்கே கரைகாட்ட அருளாயோ.**

இறைமகன் இயேசுவைக் கண்டு மகிழ்ந்து கொண்டாடும் வளன் வாயிலாகப் பொறுமையின் பெருமையினைப் புலப்படுத்துகிறார் வீரமாமுனிவர். பெத்திலேம் மக்கள் உதவாத போதும் பொறுமையோடு அதனைத் தாங்கிப் பெருமை பெற்றோர் வளன்.

**பொறுத்தல் இறப்பினை யார்மட்டும் அதனை**
**மறுத்தல் அதனினும் நன்று.**

**தீயினால் சுட்ட புண்**

தாங்கவியலாத துன்பத்துடன் துடித்த யுதருக்கு ஆதரவாக அமைந்த மோசே, எசித்து அரசனிடம் எடுத்தோதியும் அவன் செவிமடுத்துக் கேட்கவில்லை. எனவே மோசே எறிந்த பிரம்பு செந்நிறப் பாம்பாக மாறியது. அதுகண்டு கலங்காதிருந்த பார்வோன் செயலால் எசித்து நாடு உயிரற்ற பிணம்போல் ஆயிற்று. மோசே வேகமாகச் சுழற்றிய பிரம்பினால் மன்னன் முதல் மக்கள் அனைவரும் தொழுநோயால் துன்புற்றனர். தீயினால் சுட்டபுண் ஆறினாலும் ஆறாத இயல்பினால் பாவம் விளைவிக்கும் செருக்கை மன்னனிடமிருந்து விடுவிக்க மோசே அயராது செயலாற்றிய செய்தி சித்திரிக்கப்பட்டுள்ளது.

**சுட்டநோய் ஆறின் ஆறாத்**
**துகள்தரும் தருக்கு நீக்க**
**விட்டநோய் போதா வேகத்து**
**இவன்சுழல் சூரல் தன்னால்**
**குட்டநோய் அரசன் ஆதி**
**கொண்டுளம் குலைந்தார் யாரும்**
**பட்டநோய் ஒன்றும் இன்றிப்**
**பரிவற யுதர் வாழ்ந்தே**

திருவள்ளுவரின் தொடர் ஒன்றினாலே இந்நிகழ்ச்சியை விரித்துரைத்துள்ளார் வீரமாமுனிவர்.

**தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

நாவினால் சுட்ட வடுவே தேம்பாவணியில் செருக்காக அமைந்தது.

## நிறைவுரை

வீரமாமுனிவர் வழங்கியுள்ள தேம்பாவணியுள் திருக்குறள் பாக்களும் தொடர்களும் கருத்து மணிகளும் ஆசிரியக் கூற்றாகவும் கதை மாந்தர் மொழியாகவும் ஒளியுடன் மிளிர்கின்றன. கதை மாந்தர் பெயர்கள் அனைத்தும் தமிழ் மரபுக்கு ஏற்ப அமைந்துள்ளன. யுதேயா நாட்டுக் கதையில் தமிழ்ப் பண்பாடு புகழ் மணம் பொலிய விளங்குகிறது. அறநூலாகிய திருக்குறளின் பெருமை தேம்பாவணிக் காப்பியத்தில் சிறப்பிடம் பெறுகிறது. தேம்பாவணி புலப்படுத்தும் அறத்தின் திறம் தனிச் சிறப்புடன் திகழ்கிறது.

## துணை நூல் பட்டியல்


1. ஜோசப்பு ராயர் தேம்பாவணி வசனம், புதுவை எழுத்தானர் கழகம், புதுச்சேரி
2. மார்கரெட்டு பாசுடின் தேம்பாவணி மூலமும் எளிய உரையும், கலைக்காவேரி நுண்கலைக்கல்லூரி திருச்சிராப்பள்ளி